பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை 17.08.2025 கதிர் 281

## இது ரகசியம் அல்ல!

என்னதான் தமிழ் அரசியல் கட்சிகளும்சிலசிவில்அமைப்பினரும் தமிழ் மக்களின் இனநலன் கருதி கட்சிகள் எல்லாம் ஒற்று மைப்படவேண்டும் ☞ 2

### அளவுக்கதிகமான இராணுவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து

# வடக்கு கிழக்கில் நாளை முழு கடையடைப்பு

### களத்தில் குதிக்கிறது தொழிலாளர்கள் படை

வடக்கு கிழக்கில் அளவுக் கதிகமாகக் குவிக்கப்பட்டுள்ள படையினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிஅழைப்புவிடுத்துள்ள கடையடைப்புப்போராட்டம்நாளை முழுஅளவில்இடம்பெறவுள்ளது. வடக்கு கிழக்கு எங்கும் ஓரிரு வர்த்தக சங்கங்களைச் சேர்ந்த சில சுயநல வர்த்தகர்கள் இந்தப் போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதும்பெரும்பாலான வர்த்தகர்களும் வர்த்தக சங்கங்களும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. முக்கியமாக போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ள உழைக் கும் தொழிலாளர் வர்க்கம் போராட்டத்திற்கு ஆதரவாகத் தாம் பணிக்குச் செல்லமாட்டோம் என்று அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம், மு-த்துஐயன்கட்டு குளக்கரையில் அமைந்திருந்த இராணுவ முகாமிற்குள் சென்ற இளைஞர் ஒருவர் பின்னர் ☞ 2

# மின்சாரம் தாக்கி இளைஞர் இறப்பு

### யாழ்ப்பாணத்தில் சோகம்

யாழ்ப்பாணம் ஆறு கால்மடம் பகுதியில் நேற்று மாலை மின்சாரம் தாக்கி யாழ்ப்பாணம் சங்கரத்தை பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய அருண் ஜீவன் பிரசாத் உயிரிழந்தார்.

வாகன திருத்தும் இடத்தில் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்த இளைஞர் மின்சாரத்தால் தாக்குண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

உயிரிழந்த இளைஞரின் சடலம் தற்போது ☞ 2

## அடுத்தடுத்து மூன்று நாடுகளுக்கு அநுரகுமார அடுத்த மாதம் பயணம்

அரசுத் தலைவர் அநுரகுமார அடுத்த மாதம் அமெரிக்கா, ஜப்பான், ஜெனீவா என அடுத்தடுத்து மூன்று நாடுகளுக்கு அரசுமுறைப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார். தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் அயலுறவுக்கொள்கை விடயங்களில் இந்தப் பயணங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

அரசுத்தலைவர்அநுரகுமாரசெப்டம்பர்23 ☞ 6

# தமிழ் அரசுக் கட்சியின் ஹர்த்தாலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முழு ஆதரவு

### கிழக்கு முழுமையாக முடங்கும்

பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பாதுகாப்பு படைகள் சட்டம் ஒழுங்கினை மீறி கொடூரச் செயல்களில் ஈடுபடுவது நாட்டின் சட்ட அமுலாக்கத்தின் ஆழமான சீர்கேட்டை வெளிப்படுத்துகிறது. எனவே நீதி, பொறுப்புகூறல் மற்றும் இராணுவத்தினுள் நிலவும் தண்டனையற்ற சூழ்நிலைக்கு முடிவுகோரும்அமைதியானஎதிர்ப்பாக நாளை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்குமுழுமையானஆதரவை வழங்குவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் அறிவித்துள்ளது. இதனால் கிழக்கு மாகாணத்தில் முழு அளவில் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படும் என்று தெரிகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர் நேற்று அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது : ☞ 2

## மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துங்கள்

### ஐக்கிய சுதந்திர முன்னணி வலியுறுத்து

ஆளும்தரப்பு எதிர்க்கட்சியில் அங்கத்துவம் வகித்தபோது தேர்தல்கள் தாமதிக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. ஆனால் அவர்களின் ஆட்சியிலும் மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆளும்தரப்பு அதன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய சுதந்திர முன்னணி வலியுறுத்தியுள்ளது.

உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களுக்கான கருத்தரங்கு நேற்று சனிக்கிழமை கொழும்பு - டாலி வீதியிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் ஏற்பாடு ☞ 2

## வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக ஓகஸ்ட் 30 வடக்கு கிழக்கில் போராட்டம்

வலிந்துகாணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி வட, கிழக்கு வலிந்து காணாமலாக் கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தின் ஏற்பாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருவேறு கவனயீர்ப்புப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வருடாந்தம் ஓகஸ்ட் மாதம் 30 வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கானசர்வதேச ☞ 2

## இரு தபால் தொழிற் சங்கங்கள் இன்று முதல் வேலை நிறுத்தம்

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கமும், ஐக்கிய தபால் தொழிற்சங்க முன்னணியும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன. 19 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் மேலதிக வேலை நேர கொடுப்பனவு வழங்கல் மற்றும் வருகையைப்பதிவுசெய்வதற்கானகைரேகைப் பதிவு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளமை என்பவற்றுக்கு எதிர்ப்பினை வெளியிடுவதாக இந்த சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. எவ்வாறிருப்பினும்இதற்குஎதிர்ப்பினை ☞ 2

## செப்டெம்பர் ஐ.நா. தீர்மான வரைவில் அரசமைப்பு உருவாக்க முயற்சியும்

### உள்ளடக்குகின்றன இணை அனுசரணை நாடுகள்

ஐ.நாமனிதஉரிமைகள்பேரவையின்செப்டெம்பர் மாதக்கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணையில் ☞ 2

## நல்லூர் கடை வீதிக்குள் இளைஞர் மீது நேற்றிரவு துரத்தித் துரத்தி வாள் வெட்டு

### இளைஞர் காயம்: ஐவர் கைது

நல்லூர் கந்தசுவாமி ஆலய பின் வீதியில் அமைந்துள்ள வீதி தடைக்கு அருகில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த வன்முறை சம்பவம் ☞ 2

## அஞ்சல் சேவை அதிகாரிகளின் விடுமுறைகள் உடன் நிறுத்தம்

வேலை நிறுத்த போராட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் அஞ்சல் சேவையின் அனைத்து அதிகாரிகளின் விடுமுறை அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தபால்தொழிற்சங்களின்வேலை நிறுத்தத்தால்நாடுமுழுவதும்அஞ்சல் மற்றும் விநியோக சேவைகளில் ஏற்படக்கூடிய இடையூறுகளை கவனத்தில்கொண்டுஇந்ததீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகதபால்மாஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆளும்தரப்பின்நடவடிக்கையை மீறி வேலைநிறுத்தத்தைத் தொடரப்போவதாக தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். அதே வேளை தபால் சேவைகள் தடையின்றிமுன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கு இந்த தீர்மானம் அத்தியாவசியமானதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்றும் தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமைப்படவேண்டும்என்றும்பேசினாலும் எழுதினாலும் அவர்கள் மத்தியில் எவ்வளவு தூரத்திற்கு அரசியல் காழ்ப்புணர்வு, வனமம், பழிவாங்கும் உணர்வு, வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் ஆளையாள் இழுத்து விழுத்தும் வெறி என்பன புரையோடிப்போயுள்ளன என்பதை நாளை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போராட்டம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

இந்தப் போராட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்தது. அதிலும் அந்தக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்தான் இந்த அழைப்பை முதலில் விடுத்தார். தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலிலும் அதன் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்களின் அதிகளவு ஆதரவைப் பெற்ற தனியொரு கட்சி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்ட நிலையில், இந்தப் போராட்டத்தில் அது வெற்றிபெற்றுவிட்டால் மக்கள் ஆதரவை அது மேலும் வசீகரித்துவிடும் என்ற அச்சம், பயம், வெறுப்புக் காரணமாகவே இந்தப் போராட்டத்தை அந்தக் கட்சிகள் ஆதரிக்கவில்லை.

இதற்கு முன்னர் தமிழ் அரசுக் கட்சி அல்லாத எந்தவொரு தரப்பு விடுத்த போராட்ட அழைப்புக்களுக்கும் தமிழ் அரசுக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. அது பங்காளியாக இல்லாத போராட்டங்களிலும்கூட, தனது ஆதரவு இருப்பதாகத் தமிழ் அரசுக் கட்சி பகிரங்க அறிக்கை மூலம் அறிவித்திருக்கிறது. ஆனால், போராட்டத்திற்கு இன்னும் ஒரு நாள் மட்டுமே இருக்கும் நிலையிலும்கூட சிறீ ரெலோ கட்சியைத் தவிர எந்தவொ-ரு தமிழ்க் கட்சியும் இந்தப் போராட்டத்திற்குத் தமது தார்மீக ஆதரவைக்கூட அறிவிக்கவில்லை. இன்று சிலவேளைகளில் தமது ஆதரவும் இருக்கிறது என்று ஒப்புக்குச் சப்பாணியாக அறிவிப்புக்கள் வரக்கூடும். அதுவும் தமிழ் அரசுக் கட்சி தனித்து நின்று இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டால் ஒட்டுமொத்தப் பேரும் புகழும் அதற்குப் போய்விடுமே என்கிற அச்சம் காரணமாக, தமக்கும் அதில் பங்கு வேண்டுமே என்பதற்காக அந்த அறிக்கை வரக்கூடும்.

நாளைய போராட்டத்திற்கான காரணம், வடக்கு கிழக்கில் அளவுக்கதிகமாக இருக்கும் படையினர் அகற்றப்படவேண்டும் என்பதுதான். படையினர் எண்ணிக்கையில் அதிகமாக இங்கு இருப்பதன் காரணமாகவே முல்லைத்தீவில் இடம்பெற்ற இளைஞனின் உயிரிழப்பு நிகழ்ந்தது என்பதே தமிழ் அரசுக் கட்சி முன்வைத்துள்ள விடயம். அதனால் படையினர் இங்கிருந்து அகற்றப்படவேண்டும் என்று அது வலியுறுத்திப் போராட்டத்தை அறிவித்துள்ளது. இந்தக் காரணம் ஒன்றும் புதிதில்லை. கடந்த காலங்களில் எல்லா அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் வலியுறுத்திய விடயம்தான். வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் அகற்றப்படவேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைதான். அதைச் செய்யாததன் விளைவாக இப்போது தேவையற்று மேலும் ஒரு உயிர் இழக்கப்பட்டிருக்கிறது. எனவே அதையொட்டி தமது கோரிக்கையைத் தமிழர்கள் ஆளும்தரப்புக்களுக்கு மீண்டும் வலியுறுத்துவது கட்டாயமாக இருக்கின்றது. அதற்காகத்தான் போராட்டம்.

அப்படியிருந்தும் அரசியல் காழ்ப்புணர்வு, வன்மம், வெறுப்பு காரணமாக இந்தப் போராட்டத்தைக் குழப்புவதிலேயே தமிழ்க் கட்சிகள் பலவற்றின் மறைகரங்கள் பணியாற்றுகின்றன. முத்துஜயன்கட்டில் உயிரிழந்தவர் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்படுபவர், அவர்களுடன் சேர்ந்து திருட்டில் ஈடுபட்டவர் என்றெல்லாம் அவதூறு பரப்பி அப்படிப்பட்ட ஒரு திருடனுக்காகவா இந்தப் போராட்டம் என்கிற வகையில் இதனைக் கொச்சைப்படுத்தப் பார்க்கின்றனர். சமூக ஊடகங்களிலும் பல வர்த்தகர்கள் மத்தியிலும் இந்த நஞ்சை விதைக்கின்றனர்.

உயிரிழந்தவர் யாராகவும் இருக்கட்டும் அவர் ஒரு குற்றவாளியாகவேகூட இருக்கட்டும், அவர் ஒரு தமிழர், அவரது இறப்பு வடக்கு கிழக்கில் அளவுக்கதிகமாக இருக்கும் இராணுவத்தினரின் இருப்பால் நிகழ்ந்துள்ளது என்பதுதான் போராட்டத்தின் அடிநாதம். இது தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். ஆனால், வதந்திகளும் பொய்களும் பரவுவதையும் அதனடிப்படையில் தவறான கருத்துவாக்கம் உருவாவதையும் இவர்கள் தடுக்கமாட்டார்கள், ஊக்குவிப்பார்கள். பின்னர் தமக்குத் தேவை என்கிறபோது தமிழர் ஒற்றுமை, தமிழ் கட்சிகளின் ஒற்றுமை என்று கொடி பிடித்துக்கொண்டு வருவார்கள்.

இத்தகைய அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் சுயலநல வர்த்தகர்களுக்கும் சாட்டையடியாகத் தமிழ் மக்களின் பதில் நாளைய போராட்டத்தில் வெளிப்படவேண்டியது காலத்தின் கட்டாயம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com

## வடக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்திலிருந்து உயிரிழந்த சடலமாக மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, போருக்குப் பின்னரும் வடக்கு கிழக்கில் அளவுக்கு மீறிக் காணப்படும் படையினரின் பிரசன்னமே இத்தகைய உயிரிழப்புக்களுக்குக் காரணம் என்று தெரிவித்து வடக்கு கிழக்கு முழுவதும் முழு அடைப்புப் போராட்டத்திற்குத் தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இந்தப் போராட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவும் முழு அளவில் ஆதரவு தெரிவித்துள்ளன. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு ஓய்வுகிட்டவில்லை என்பதைக் காரணமாகக் காட்டியே இந்தத் தரப்புக்களும் தமிழ் அரசுக் கட்சியின் போராட்டத்திற்கு முழு அளவில் ஆதரவு தெரிவித்துள்ளன. இருப்பினும் வடக்கு கிழக்கில் அரசியல் செய்துவரும் பல தமிழ்க் கட்சிகளும் தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றோம், தமிழர்களின் ஒற்றுமையை வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவிக்கும் தமிழ் சிவில் அமைப்புக்களும் இந்தப் போராட்டம் குறித்துக் கள்ள மௌனம் காத்துவருகின்றன.

இந்தப் போராட்டம் நியாயமானது என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், அதற்கு அழைப்பு விடுத்தவர் தவறானவர் என்று தெரிவித்திருப்பதுடன் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும்கூட இந்தப் போராட்டத்திற்கு நேற்றிரவு வரையில் ஆதரவு தெரிவிக்கவில்லை.

இருப்பினும் வடக்கு கிழக்கில் உள்ள வர்த்தகசங்கங்கள், தொழிலாளர் அமைப்புக்கள் ஆகியவை இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளன. வவுனியா வர்த்தகர் சங்கம் மட்டுமே இந்தப் போராட்டத்திற்குத் தாம் ஆதரவு தரப் போவதில்லை என்று அறிவித்துள்ளது. ஏனைய வர்த்தக சங்கங்கள் ஒன்றில் வெளிப்படையாகத் தமது ஆதரவை வழங்கியுள்ளன. அல்லது வர்த்தகர்களின் முடிவுக்கே அதனை விட்டுள்ளன. இதற்கிடையே கடைகளிலும், தொழில்நிலையங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் வர்க்கம் இந்தப் போராட்டத்திற்கு முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது. தாம் பணிகளுக்குச் செல்லாமல் புறக்கணித்து இந்தப் போராட்டத்திற்கு முழு ஆதரவளிப்பதாக தொழிலாளர்கள் பலரும் தெரிவித்துள்ளனர். இதனைத் தடுக்கும் வகையில் சில முதலாளிகள் பணிக்கு வரவேண்டும் என்று மிரட்டி வருகின்றனர் என்றும் அதனை எதிர்த்து தாம் போராட்டத்திற்கு முழு அளவில் ஆதரவு தருவோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## செப்டெம்பர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு உருவாக்கப்பணிகளை ஆரம்பித்தல், பயங்கரவாத் தடைச்சட்டத்தை நீக்குதல், மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு வாக்குறுதி அளித்தவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல் மற்றும் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைத்தேர்தல்களைத் தொடர்ந்து காலந்தாழ்த்தாமல் விரைவாக நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் 'இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம்' முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அதற்கமைய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விரிவான எழுத்துமூல அறிக்கை, கூட்டத்தொடரின் ஆரம்ப நாளான 8 ஆம் திகதி உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

இது இவ்வாறிருக்க பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணையொன்றை சமர்ப்பிக்கவுள்ளன.

அப்பிரேரணையில் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு வாக்குறுதி அளித்தவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும், பயங்கர வாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல் மற்றும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைத்தேர்தல்களைத் தொடர்ந்து காலந்தாழ்த்தாமல் விரைவாக நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

அதேவேளை செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி விவகாரம் சர்வதேச கவனம் பெற்றிருக்கும் நிலையில், மனிதப்புதைகுழிகளுடன் தொடர்புடைய விடயங்களும் இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணையில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மின்சாரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் போதனை வைத்தியசாலையில் விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

## வலிந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை முன்னிட்டு வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் வருடாந்தம் ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வட, கிழக்கு மாகாணங்களில் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அதன் நீட்சியாக இவ்வருடமும் எதிர்வரும் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வடக்கிலும், கிழக்கிலும் தனித்தனியாக இருவேறு கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்விரு போராட்டங்களும் நடைபெறவிருக்கும் இடங்கள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

அதேவேளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டத்திலும் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

## இரு தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது நியாயமற்றது என தபால்மா அதிபர் ருவான் சத்குமார அறிக்கையொன்றை வெளியிட்டு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சுற்று நிரூபம் ஒட்டு மொத்த அரச சேவை ஊழியர்களுக்குமான சம்பள உயர்வு மற்றும் மேலதிக வேலை நேரத்துக்கான உரிமைகளை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அந்த வகையில் கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது 40 சதவீத சம்பள மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

தற்போது தபால் துறையின் மொத்த செலவினங்களில் 90 சதவீதம் சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு உள்ளிட்டவற்றுக்கு ஒதுக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் பொது மக்களை அசௌகரியத்துக்கு உட்படுத்தும் வகையில் தொழிற்சங்கங்கள் ஊழியர்களை தவறாக வழிநடத்தி, சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது வருந்தத்தக்கது என தபால்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

3,354 துணை அஞ்சல் அலுவலகங்களில், துணை அஞ்சல் அதிகாரிகள் வேலைநிறுத் தத்தில் பங்கேற்க மாட்டோம் என்று அறிவித்துள்ளதாகவும், இந்த அலுவலகங்கள் தொடர்ந்து வழக்கம் போல் இயங்கும் என்றும், அஞ்சல் சேவைகள் அவற்றின் மூலம் கிடைக்கும் என்றும் ருவான் சத்குமார மேலும் குறிப்பிட்டார்.

இருப்பினும், வேலைநிறுத்தம் காரணமாக அஞ்சல் விநியோகம் தாமதமாகலாம் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுவதாகவும், இந்த நியாயமற்ற தொழிற்சங்க நடவடிக்கையால் ஏற்படும் ஏதேனும் சிரமத்திற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் அரசுக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவில் அண்மையில் இடம்பெற்ற படுகொலை, இராணுவ உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது. பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய படைகள் தாமே சட்டமும் ஒழுங்கும் இழந்து இப்படி கொடூரச் செயல்களைச் செய்வது, இந்த நாட்டின் சட்ட அமுலாக்கத்தின் ஆழமான சீர்கேட்டை வெளிப்படுத்துகிறது. இப்படிப்பட்ட குற்றங்களுக்கு பொறுப்பேற்கச் செய்வதில் அரசின் இயலாமை, அல்லது விருப்பமின்மை, பொதுமக் நம்பிக்கையை சிதைத்து, நிரபராதிகளின் உயிரை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது. பொதுமக்களின்

இன்னும் ஒரு கவலைக்குரிய விடயம் என்னவெனில் ஆளும்தரப்பு இஸ்ரேலிலிருந்து பயணிகளுக்கு விசா விலக்கு வழங்கும் போக்காகும். இவர்கள் பலர் காசாவில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியதாக பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இஸ்ரேல் பாதுகாப்புப்படை உறுப்பினர்களே.

இந்த சூழ்நிலையில் எதிர்வரும் நாளை திங்கட்கிழமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ள ஹர்த்தாலை முழுமையாக ஆதரிக்க எங்கள் கட்சி தீர்மானித்துள்ளது. இது நீதி, பொறுப்புகூறல், மற்றும் இராணுவத்தினுள் நிலவும் தண்டனையற்ற சூழ்நிலைக்கு முடிவுகோரும் அமைதியான எதிர்ப்பாகும்.

வடகிழக்கில் உள்ள நமது முஸ்லிம் சகோதரர்களும், சகோதரிகளும், திங்கட்கிழமை குறைந்தபட்சம் காலை நேரத்தில் தங்கள் கடைகள் மற்றும் தொழில்களை மூடுவதன் மூலம் இந்த ஒற்றுமை போராட்டத்தில் இணையுமாறு அன்புடன் அழைக்கிறோம். தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து வன்முறையை நிராகரித்து, அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

## மாகாண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர்கள் இதனைத் தெரிவித்தனர்.

தற்போதைய ஆளும்தரப்பு எதிர்க்கட்சியில் அங்கத்துவம் வகித்த போது தேர்தல்கள் தாமதிக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியிருக்கிறது. பாரிய ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருக்கின்றன. ஆனால் தற்போது அவர்களுக்கு அதிகாரம் கிடைத்திருக்கிறது. எனவே அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியும். எதிர்க்கட்சிகள் என்ற ரீதியில் இதனையே நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம்.

5 ஆண்டுகளுக்கு தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணையை வழங்கியிருக்கின்றனர். தேர்தலுக்கு முன்னர் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை எந்தளவுக்கு ஆளும்தரப்பு நிறைவேற்றியிருக்கிறது என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் அரசாங்கத்துக்கு ஆதரவளித்த பெரும்பாலான மக்கள் முன்னர் கொண்டிருந்த நம்பிக்கையை தற்போது இழந்துள்ளனர். இதுவே

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடையடைப்புப் போராட்டம் மக்களின் உரிமைக் குரல்

**வடக்கு– கிழக்கு மாகாணங்களில் அளவுக்கு அதிகமாக இராணுவம் தங்கியிருப்பது பல ஆண்டுகளாகவே ஒரு பெரும் அரசியல், சமூக, பொருளாதார சிக்கலாகவே இருந்து வருகிறது. போரினால் ஏற்பட்ட அழிவுகள் முடிவுற்று பல ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், இப்பகுதிகளில் சாதாரண குடிமக்களின் வாழ்விடங்களில், பொது இடங்களில், நிலங்களிலும் கூட இன்னமும் இராணுவத்தின் அதிகப்படியான இருப்பு தொடர்கின்றது. இது சாதாரண பாதுகாப்பு தேவையை விட அதிகமானதென்பதும், மக்கள் இயல்பான வாழ்வை சுதந்திரமாக நடத்துவதில் பெரும் தடையாக இருப்பதும் வெளிப்படையான உண்மையே.**

**தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் இந்தக் கோரிக்கை மீண்டும் நாளை நடைபெறவிருக்கும் கடையடைப்புப் போராட்டம் மூலமாக ஆளும்தரப்பிற்கு வலியுறுத்தப்படுகின்றது. வடக்கு – கிழக்கில் வாழும் பொதுமக்கள் தங்கள் தினசரி உழைப்பின் மூலம் வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர்களின் நிலங்களில் விவசாயம் செய்வதற்கும், கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கும் கூட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இராணுவ முகாம்கள் நிரம்பியுள்ள காரணத்தால் பல பகுதிகளில் பொதுமக்கள் சுதந்திரமாகச் செல்ல முடியாத நிலை நிலவுகிறது. இவ்வாறு அரசால் வழங்கப்படவேண்டிய சுதந்திரமான வாழ்வின் உரிமை மறுக்கப்படுவது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானதாகும்.**

**நாளைய கடையடைப்புப் போராட்டம் இதற்கெதிராக மக்கள் குரல் கொடுக்கும் முக்கியமான வாய்ப்பாகும். இராணுவம் அதிக அளவில் தங்கி இருப்பதனால் பல்வேறு இடங்களில் பொருளாதார முன்னேற்றம் குன்றியுள்ளது. மீன்பிடித்தொழில், விவசாயம், வியாபாரம் என மக்கள் வாழ்வின் பிரதான ஆதாரங்கள் பாதிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல குடிமக்களின் உயிரிழப்புக்களுக்கும் இது காரணமாகின்றது.**

**இராணுவத்தின் வணிக நடவடிக்கைகள் கூட மக்கள் வாழ்வாதாரத்தையே நேரடியாக அச்சுறுத்துகின்றன. உணவகம் நடத்துதல், ஹோட்டல் நிர்வாகம், விவசாயம், சுற்றுலா தொழில் என பொதுமக்கள் செய்யவேண்டிய பல செயல்பாடுகளில் இராணுவம் தலையிட்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் மக்கள் போட்டியிட முடியாத நிலையை உருவாக்கி அவர்களின் பொருளாதார அடித்தளத்தை முற்றிலும் குலைக்கின்றன.**

**இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு நாளைய கடையடைப்புப் போராட்டத்தில் மக்கள் தங்கள் பங்கேற்பை வெளிப்படுத்துவது அவசியமான ஒன்றாகிறது. போராட்டம் என்பது வெறும் எதிர்ப்பைச் சுட்டிக்காட்டுவதற்கான நிகழ்வு மட்டுமல்ல; அது மக்களின் ஒற்றுமையையும் அரசியல் கோரிக்கையின் வலிமையையும் வெளிக்காட்டும் கருவியாகவும் அமைகிறது. அரசியல் கட்சிகள் தனித்தனியாகக் குரல் எழுப்பினாலும் மக்கள் பங்கேற்பில்லையெனில் அவை பலவீனமான சத்தமாக மட்டுமே கேட்கப்படும். ஆனால், மக்கள் தங்கள் வாழ்வாதாரமும் எதிர்காலமும் அச்சுறுத்தப்படுகிறது என்ற உணர்வோடு அதிகளவில் பங்கேற்றால் அது ஆட்சியினருக்குக் கடுமையான எச்சரிக்கையாக மாறும்.**

**இந்நிலையிலே, கடையடைப்புப் போராட்டத்தில் பங்கேற்பது அரசியல் கட்சிகளுக்காக மட்டுமல்ல; மாறாக ஒவ்வொரு குடும்பத்தினரின் எதிர்காலத்திற்காகவே என்பதையும் வலியுறுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. நாளைய கடையடைப்பு மக்களுக்குச் சில சிரமங்களை ஏற்படுத்தக்கூடும். அன்றாட வருமானத்தில் சார்ந்திருக்கும் சிற்றொழில் தொழிலாளர்கள், வியாபாரிகள், போக்குவரத்து தொழிலாளர்கள் எல்லோரும் ஒருநாள் வருமானத்தை இழக்க நேரிடும். ஆனால், இந்தச் சிறிய தியாகமே நீண்ட காலத்தில் மக்களின் சுதந்திரமான வாழ்வை உறுதி செய்யக்கூடிய ஒன்றாக மாறும். இன்று ஒருநாள் இழப்பை ஏற்காத பட்சத்தில் நாளை தலைமுறைகள் முழுவதும் சுதந்திரமற்ற சூழலில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படும்.**

**மேலும், உலக சமூகம் முழுவதும் மக்கள் போராட்டங்களின் வலிமையால் பல்வேறு அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மக்களின் உரிமைகளை ஒடுக்கிக் கொண்டு நீடித்த எந்த ஆட்சியும் இறுதியில் நிலைத்து நிற்கவில்லை. ஆகவே, நாளைய போராட்டம் ஒரு உள்ளூர் அரசியல் நிகழ்வு என்ற வரம்பைத் தாண்டி, மக்களின் தன்னம்பிக்கை மற்றும் உரிமைக்கான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வாய்ப்பாக மாறும்.**

**இராணுவம் வடக்கு – கிழக்கில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை வெறும் அரசியல் தீர்மானமாக அல்ல; அது மனித உரிமைகள், ஜனநாயகம், சமநிலை மற்றும் நீதிக்கான கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்த மக்களே குரல் கொடுக்க வேண்டும். நாளைய கடையடைப்புப் போராட்டத்தில் பங்கேற்று தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதன் மூலம் மக்கள் தங்கள் உரிமைக்கான குரலை வலுப்படுத்த முடியும்.**

**தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் தங்கள் பரப்புரையையும் அழைப்பையும் வலுப்படுத்தியுள்ள நிலையில், நாளை மக்கள் இணைந்து ஒற்றுமையோடு செயல்பட வேண்டும். வடக்கு – கிழக்கில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையை மீட்டெடுப்பதற்கு, நாளைய கடையடைப்பில் ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டியது மிக அவசியமாகும். மக்கள் குரலே மாற்றத்தின் அடித்தளம் என்பதை உணர்ந்து நாளைய போராட்டத்தை வெற்றிகரமாக்குவோம்.**

## நாளைய ஹர்த்தாலுக்கு முழுயளவு ஆதரவு அனைவரும் தவறாது ஆதரிக்கவேண்டும்

### வவுனியா மாநகர சபை முதல்வர் அறிவிப்பு

*வடக்கில் எங்கு பார்த்தாலும் இராணுவ முகாமை அவதானிக்கும் நிலையில் தெற்கின் நிலைமை வேறு விதமாக உள்ளது. எனவே, அதிகப்படியான இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். இதற்கு அனைவரும் ஆதரவு - ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வவுனியா மாநகர சபை முதல்வர் காண்டீபன் தெரிவித்தார்.*

*இது தொடர்பாக வவுனியாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:*

*எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற வுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். நாட்டில் உள்ள ஏனைய ஏழு மாகாணங்களைவிட வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகமாக இருக்கின்றது. எனவே, வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தைக் குறைத்து அனைத்து மாகாணங்களுக்கும் சமமான அளவில் பங்கிடவேண்டும்.*

*எமது மக்களின் காணிகளை இராணுவம் விடுவிக்கவேண்டும். தற்போதுகூட வவுனியா விமானப் படை முகாமுக்காக சகாயமாதாபுரத்துக்குப் பின்புறமுள்ள 8 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. ஆனால், அந்தக் கிராமத்தில் விளையாட்டு மைதானம் ஒன்றுகூட இல்லை. இறம்பைக்குளம் கிராமத்தில் பொதுத் தேவைக்கான காணி இல்லை. அந்தப் பகுதியில் உள்ள மயானத்துக்கான நிலம் போதுமானதாக இல்லை. எனவே, இப்படியான ஒரு நிலை இருக்கும்போது இந்தக் காணி சுவீகரிப்பை எப்படி அனுமதிக்க முடியும்.*

*எமது பகுதிகளில் கிராமங்களுக்கு ஓர் இராணுவ முகாம் இருக்கும் நிலை உள்ளது. ஆனால், தெற்கில் அவ்வாறு இல்லை. எனவே, இவ்வாறான நிலைமை மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி நாம் இந்தத் ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம் - என்றார்.*

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையினுள் முழு அடைப்புக்கு ஒன்றுபட அழைப்பு

### சபைத் தலைவர் விடுத்தார்

*புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட வர்த்தகர்கள் , பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கட்சி, மத பேதங்களைக் நாளைய ஹர்த்தால் போராட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இராணுவ பிரசன்னங்களைக் குறைக்க ஒரு வலுவான போராட்டத்தை வெளிப்படுத்தவேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் கரிகாலன் தெரிவித்தார்.*

*புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*நாளைய ஹர்த்தாலுக்கான அழைப்பு, இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ளது. புதுக் குடியிருப்பு பிரதேச சபையின் எல் லைக்கு உட்பட்ட வர்த்தகர்கள் , பொது அமைப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் நாளைய கதவடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.*

*எங்களுடைய பிரதேசங்களில் இராணுவம் ஆக்கிரமித்து இருக்கும் இடங்களில் இருந்து அகன்று அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் இருக்கவேண்டும் என முழுமையான கதவடைப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்குங்கள். எங்களுடைய பிரதேசங்களில் இராணுவ பிரசன்னங்களை குறைக்க ஒரு வலுவான போராட்டமாக இது அமைய இருக்கின்றது.*

*அதுமட்டுமல்லாமல் அண்மையில் நடந்த புதுக்குடிக்குடியிருப்புப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட முத்துஐயன்கட்டு குளப் பகுதியில் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப் பட்ட இளைஞனின் கொலை என்ற விடயம் இன்றுவரை மர்மமாகவே இருக்கின்றது.*

*அண்மையில் பொது மக்கள் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறியிருந்தார், நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று. ஊடகங் கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது. கடந்த காலங்களில் 30 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் இராணுவத் தினராலும், அரச படைகளாலும் பல வழிகளில் எங்களுடைய பிரதேசங்களை ஆக்கிரமித்துப் பல வகையில் மக்களுக்கான துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.*

*இதுவரைக்கும் அதற்கான நீதியான விசாரணைகள் எதுவும் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நடந்ததாக தெரியவில்லை. அவ்வாறு இருக்கும்போது இராணுவ பிரசன்னமானது தொடர்ச்சியாக எங்களுடைய பகுதிகளில் இருந்து நீக்கப்பட வேண்டும். இந்தக் கர்த்தால் அனுஷ்டிப்பானது கட்சி பேதங்கள் கடந்து, மத பேதங்களை கடந்து அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.- என்றார்.*

## நாவிதன்வெளி பிரதேச சபையில் நாளைய அடைப்புக்கு ஆதரவு

*நாளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் வடக்கு, கிழக்கில் விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் ரூபசாந்தன் தலைமையிலான இலங் கைத் தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.*

*இந்தக் ஹர்த்தாலுக்கு நாவிதன் வெளி பிரதேச மக்களும் வர்த்தகர்களும் முழுமையான ஆதரவை வழங்கும்படி கோரியுள்ளார்*

*எமது வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் அதீத இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகவும், முல்லைத் தீவில் இறந்த இளைஞருக்கு நீதி வேண்டியும், செம்மணி போன்ற இனப் படுகொலைக்கு நீதியை வழங்குமாறு கோரியும் அனைவரும் இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கவேண்டும். இது கட்சி பேதங்களுக்கு அப்பால் இனத்தின் நன்மை கருதிய ஹர்த்தால். ஆகவே அனைவரையும் ஒன்றாக ஆதரவளிக்குமாறு வேண்டுகின்றோம்- என்றார் தவிசாளர் ரூபசாந்தன்.*


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## மாகாண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதார்த்தமாகும்'' என்றார் முன்னாள் இராஜாங்கஅமைச்சர்லசந்தஅழகியவண்ண.

''மாகாணசபைத் தேர்தல் நாட்டுக்கு அத்தியாவசியமானஒன்றாகும். பலஆண்டுகள் இந்தத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு இதுவே சிறந்த காலம் என்று எண்ணுகின்றோம். எதிர்க்கட்சிகள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும், ஆளும்தரப்பின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியையும் இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். கோட்டாபய ராஜபக்ஷவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தார்.

ஆனால் இரண்டு ஆண்டுகளில் அவரது ஆட்சி வீழ்ச்சியடைந்தது. எனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையே அனைத்தையும் தீர்மானிக்கிறது. நாட்டின் பொருளாதார நிலைமை ஸ்திரமாகக் காணப்பட்டால் மாத்திரமே எந்தவொரு அரசாங்கத்துக்கும் நிலைத்திருக்க முடியும். எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பில் சகல எதிர்க்கட்சிகளுடனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார் முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாபா.

"புதிய அரசியல் சக்தியொன்று ஆட்சிய மைத்துள்ள நிலையில் ஓராண்டுக்குள் அந்த ஆட்சியை கவிழ்ப்பதற்கு திட்டமிடுவது பொறுத் தமற்றது. அவ்வாறான முயற்சிகளையும் எதிர்க் கட்சிகள் எடுக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை வைத்து மக்கள் அவர்களை தெரிவு செய்திருக்கின்றனர். எனவே அவர்களுக்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். எவ்வாறிருப்பினும் எதிர்கால அரசியலைக் கருத்திற் கொண்டு சகல எதிர்க்கட்சிகளையும் ஒரே அணியாக ஒன்று திரட்டும் செயற்பாடுகளையே நாம் தற்போது முன்னெடுத்து வருகின்றோம்'' என்றார் முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த.

## அடுத்தடுத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க் செல்லவுள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது அமர்வில், கலந்து கொண்டு இலங்கையின் சார்பில் செப்டம்பர் 24 உரையாற்றவுள்ளார்.

அரசுத் தலைவர்யின் உரையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான ஒத்துழைப்பு, நிலையானஅபிவிருத்தி உள்ளிட்ட முக்கிய அம்சங்களை உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பல உலக தலைவர்களுடனான இருதரப்பு சந்திப்புகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

நியூயோர்க் பயணத்தை நிறைவு செய்துகொண்டு அரசுத் தலைவர் அநுரகுமார 'ஜப்பான் - எக்ஸ்போ 2025' மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜப்பான் செல்லவுள்ளார். செப்டம்பர் 27 ஓசாக்காவில் இம்மாநாடு இடம்பெறவுள்ளது. ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபாவின் அழைப்பிற்கமையவே அரசுத் தலைவர் இப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இப்பயணத்தில் பொருளாதாரம், முதலீடு, தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு ஒத்துழைப்பு தொடர்பான முக்கிய பேச்சுக்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரவில் ஒளிரும் ஸ்ரிக்கர்கள் சைக்கிள்களுக்கு ஒட்டப்பட்டன

### யாழ். நகரில் நேற்று

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம் முன்பாக துவிச்சக்கர வண்டிகளுக்கு (சைக்கிள்) இரவு நேரத்தில் ஒளிரும் ஸ்டிக்கர்கள் நேற்று ஒட்டப்பட்டன.

'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் விபத்துக்களை குறைக்கும் வகையில் அரசுத் தலைவர் செயலகம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், தூய்மை இலங்கை திட்ட பணிப்பாளர் தசூன் உதார, தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் கபிலன், போக்குவரத்து பிரிவு உதவி பொலிஸ் பரிசோதகர் ஜேசுதாஸன் உள்ளிட்ட பலரும் இதன்போது பங்கேற்று துவிச்சக்கர வண்டிகளுக்கான ஸ்டிக்கர்களை ஒட்டினர்.

# நல்லூர் ஆலயத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

*யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் பகுதியில் வெடி குண்டு இருப்பதாக வந்த அநாமதேய நபரொருவரின் தொலைபேசி அழைப்பால் நேற்று ஆலயத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.*

*நேற்று அதிகாலை வந்த தொலைபேசி அழைப்பையடுத்து விசேட அதிரடிப் படையினர், மற்றும் பொலிஸார் ஆலய சூழலில் மோப்ப நாய் சகிதம் குவிக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த மிரட்டல் விசமிகளால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டது என்றும் அதில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் யாழ். மாநகர சபை முதல்வர் மதிவதனி தெரிவித்தார்.*



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி

SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2025இல் வெளியிடப்பெற்றது